# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 349 | 4 Pages | 11.7.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 349 | 4 பக்கங்கள் | 11.7.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## விளையாட்டு கற்றுத்தருவதாக கூறி மாணவிகளுக்கு பாலியல் தொல்லை

பெங்களூரு, ஜூலை 11

கர்நாடக மாநிலம் மண்டியா மாவட்டம் பாண்டவபுரா தாலுகா மேல்கோட்டை டவுனில் அரசு உயர்நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளியில் படித்து முடித்த முன்னாள் மாணவர் யோகி (வயது 25).

இவர் அந்த பள்ளியில் படித்து வரும் மாணவமாணவிகளுக்கு ஓவியம் வரைவது பற்றியும், விளையாட்டுகளைகற்றுக்கொடுப்பதாகவும்கூறியுள்ளார். அதன்படி அவர் மாணவமாணவிகளுக்கு ஓவியம் மற்றும் விளையாட்டுகளை கற்றுக் கொடுத்து வந்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக அவர் தன்னிடம் பயிற்சிக்கு வரும் மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்து வந்துள்ளார். மேலும் சில மாணவிகளை ஆபாசமாக படம் எடுத்து வைத்து மிரட்டியும் வந்துள்ளார். அவரது பாலியல் தொல்லையால் பாதிக்கப்பட்ட 4 மாணவிகள் சம்பவம் பற்றி தங்களது பெற்றோரிடம் கூறியுள்ளனர்.

அதன்பேரில் பெற்றோர்கள், மேல்கோட்டை போலீசில் புகார் அளித்தனர். அதையடுத்து போக்சோ சட்டத்தின் கீழ் யோகியை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

## பாஜக மகளிரணி செய்தித்தொடர்பாளர் வீட்டில் கொள்ளை : அதிர்ச்சி சம்பவம்

ராஞ்சி, ஜூலை 11

ஜார்க்கண்ட் மாநிலம் பலம்பு மாவட்டம் மதினிநகரை சேந்தவர் லவ்லி குப்தா. இவர் பலம்பு மாவட்ட பாஜக மகளிரணி செய்தித்தொடர்பாளராக உள்ளார்.

இந்நிலையில், லவ்லி தனது குடும்பத்துடன் கடந்த ஞாயிற்றுகிழமை ராஞ்சி சென்றுள்ளார். இதை சாதகமாக பயன்படுத்திய கொள்ளையர்கள் லவ்லி வீட்டிற்குள் புகுந்து நகை பணத்தை கொள்ளையடித்து சென்றனர்.

வீட்டில் இருந்த 20 லட்ச ரூபாய் மதிப்புள்ள நகை, 1 லட்ச ரூபாய் ரொக்க பணத்தையும் கொள்ளையர்கள் கொள்ளையடித்து சென்றனர். இந்த சம்பவம் குறித்து தகவலறிந்த போலீசார் வழக்குப்பதிவு செய்து கொள்ளையர்களை தீவிரமாக தேடி வருகின்றனர்.

## ரதயாத்திரையின்போது சாமி சிலை சரிந்து விழுந்து பக்தர்கள் காயம்



புவனேஷ்வர், ஜூலை 11

ஒடிசா மாநிலம் பூரி மாவட்டத்தில் இந்து மத வழிபாட்டு தலமான உலகப்புகழ்பெற்ற பூரி ஜெகநாதர் கோவில் உள்ளது. இந்த கோவிலில் கடந்த 7ம் தேதி ரத யாத்திரை நடைபெற்றது. இதில் பலராமர், கிருஷ்ணர், சுபத்ரா ஆகிய கடவுள் சிலைகள் தனித்தனி தேரில் நகர் முழுவதும் யாத்திரையாக கொண்டுவரப்பட்டன. இதை தொடர்ந்து பிற கடவுள் சிலைகளும் யாத்திரையாக நகர் முழுவதும் கொண்டு செல்லப்பட்டு வருகிறது.

அந்த வகையில் பூரி ஜெகநாதர் கோவில் உள்ள கடவுள் பாலபத்ராவின் சிலை நேற்று யாத்திரையாக கொண்டு செல்லப்பட்டது. ரத யாத்திரையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிலையில், ரத யாத்திரை சென்றுகொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக கடவுள் பாலபத்ராவின் சிலை சரிந்து பக்தர்கள் மீது விழுந்தது. இந்த சம்பவத்தில் 9 பேர் காயமடைந்தனர். காயமடைந்த அனைவருக்கும் முதலுதவி அளிக்கப்பட்டது. இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## மது அருந்தும்போது தகராறு: நண்பனை கிரிக்கெட் மட்டையால் அடித்துக்கொன்ற நபர் கைது

குருகிராம், ஜூலை 11

அரியானா மாநிலம் பதேஹாபாத் மாவட்டத்தை சேர்ந்தவர் பூப் சிங். இவர், தனது நண்பர் அனிஷ் மற்றும் சக நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்துக்கொண்டிருந்தார். அப்போது அவர்களுக்கிடையே வாய்த்தகராறு ஏற்பட்டது. தகராறு முற்றிய நிலையில், ஆத்திரமடைந்த அனிஷ், கிரிக்கெட் மட்டையை எடுத்து நண்பர் என்றும் பார்க்காமல் பூப் சிங்கின் தலையில் ஓங்கி அடித்தார்.

இதில் பூப் சிங், படுகாயமடைந்து சரிந்து விழுந்தார். உடனே அனிஷ் அங்கிருந்து தப்பியோடிவிட்டார். இதையடுத்து பூப் சிங்கை அருகில் இருந்தவர்கள் மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர். ஆனால் மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே பூப் சிங் உயிரிழந்தார்.

இது குறித்த புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார், தலைமறைவாக இருந்த அனிஷை கண்டுபிடித்து கைது செய்தனர். இது தொடர்பாக மேலும் விசாரணை நடைபெற்று வருகிறது.

## கொண்டை ஊசி வளைவில் திரும்பும்போது பள்ளத்தாக்கில் விழுந்த பஸ் 2 பேர் பலி

காந்தி நகர், ஜூலை 11

குஜராத் மாநிலம் சூரத்தை சேர்ந்த 65 பேர் நேற்று முன் தினம் தங் மாவட்டம் சபுதரா கட் பகுதியில் உள்ள மலைப்பகுதிக்கு பஸ்சில் சுற்றுலா சென்றுள்ளனர். சுற்றுலா பயணத்தை முடித்துவிட்டு அனைவரும் மாலை பஸ்சில் வீடு திரும்பிக்கொண்டிருந்தனர். மலைப்பகுதியில் இருந்து சுற்றுலா பஸ் கீழே இறங்கியுள்ளது. இதை பஸ்சில் இருந்த சுற்றுலா பயணி தனது செல்போனில் வீடியோ எடுத்துள்ளார். அப்போது, மலைப்பாதையில் கொண்டை ஊசி வளைவில் திரும்பும்போது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த சுற்றுலா பஸ் பள்ளத்தாக்கில் விழுந்த விபத்துக்குள்ளானது. இந்த சம்பவம் பஸ்சில் பயணம் செய்த சுற்றுலா பயணியின் செல்போனில் வீடியோவாக பதிவாகியுள்ளது. இந்த விபத்தில் மலைப்பகுதியில் பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்தது. இதில் பஸ்சில் பயணம் செய்த 2 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்தனர். இந்த விபத்து குறித்து தகவலறிந்த போலீசார் விரைந்து வந்து படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்த விபத்து சம்பவம் தொடர்பான வீடியோ தற்போது சமூகவலைதளத்தில் வைரலாகி வருகிறது.

# காவல்துறை பாரபட்சமின்றி நெஞ்சுரத்தோடு கடமையாற்றும்: முதல்வர் மு.க. ஸ்டாலின்

சென்னை, ஜூலை 11

சென்னையில் படுகொலை செய்யப்பட்ட பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் இல்லத்திற்கு இன்று முதல் அமைச்சர் மு.க ஸ்டாலின் நேரில் சென்றார். ஆம்ஸ்ட்ராங்கின் மனைவி மற்றும் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் தெரிவித்தமு.கஸ்டாலின், கொலை பாதகச்செயலில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்திக் கடும் தண்டனையைப் பெற்றுத் தருவோம் என்று உறுதி அளித்துள்ளார்.

முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் இது தொடர்பாக தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது:

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் மறைவையொட்டி, பெரம்பூரில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்று அவரது திருவுருவப்படத்துக்கு அஞ்சலி செலுத்தி, துயரில் வாடும் அவரது மனைவி பொற்கொடிக்கும் குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்தேன்.



கொலை பாதகச் செயலில் ஈடுபட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்திக் கடும் தண்டனையைப் பெற்றுத் தருவோம் என்று பொற்கொடிக்கு உறுதி அளித்தேன். கொலைக் குற்றத்தின் பின்னணியில் இருப்பது யாராக இருந்தாலும் அவர்களைக் கண்டறிந்து தண்டிப்பதில் எனது அரசு உறுதியாக உள்ளது. இது அனைவருக்குமான அரசு. அனைவரையும் அரவணைத்து எளியோர் நலன் காக்கும் அரசு, நீதியை நிச்சயம் நிலைநாட்டும்! காவல்துறை பாரபட்சமின்றி நெஞ்சுரத்தோடு கடமையை ஆற்றும்" என்றார்.

# பட்டாசு ஆலை விபத்து: உயிரிழந்தோர் குடும்பத்தாருக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்: எடப்பாடி பழனிசாமி

சென்னை, ஜூலை 11

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே காளையார்குறிச்சி பகுதியில் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் இருவர் உயிரிழந்ததாக வரும் செய்திகேட்டு அதிர்ச்சியுற்றேன். உயிரிழந்தோர் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்.படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவோர் பூரண உடல்நலம் பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.



விருதுநகர் மாவட்டத்தின் பட்டாசு ஆலைகளில் தொடர்ச்சியாக வெடிவிபத்துகளும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளும் அதிகரித்து வரும் நிலையில், இதுகுறித்து நானும் பல்வேறு முறை சுட்டிக்காட்டி வந்தும், எந்த நடவடிக்கையும் எடுக்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும் அக்கறையற்ற விடியா திமுக அரசுக்கு எனது கடும் கண்டனம்.

உயிரிழந்தோர் குடும்பத்தாருக்கு உரிய நிவாரணம் வழங்கவும், தமிழ்நாடு முழுவதும் உள்ள பட்டாசு ஆலைகளில் பாதுகாப்பு தரப்பரிசோதனை மேற்கொள்வதுடன், வெடிவிபத்தை தடுப்பதற்கான புதிய கொள்கை வடிவமைத்து செயல்படுத்துமாறும் விடியா திமுக அரசின் முதல்அமைச்சரை வலியுறுத்துகிறேன்.என தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் 18 ஐ.பி.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம்

சென்னை, ஜூலை 11

தமிழக காவல்துறையில் 18 ஐ.பி.எஸ். அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி தாம்பரம் காவல் ஆணையர் அமல்ராஜ் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு ஏ.டி.ஜி.பி.யாக நியமிக்கப்பட்டுள்ளார். தாம்பரம் புதிய காவல் ஆணையராக அபின் தினேஷ் மோதக் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தெற்கு மண்டல ஐ.ஜி.யாக பிரேமானந்த் சின்ஹா நியமிக்கப்பட்டுள்ளார். ஆயுதப்படை ஏ.டி.ஜி.பி.யாக




இருந்த ஜெயராமன் மாநில குற்ற ஆவண பிரிவு ஏ.டி.ஜி.பி.யாக நியமிக்கப்பட்டுள்ளார். வடக்கு மண்டல ஐ.ஜி.யாக அஸ்ரா கார்க் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.


ஆயுதப்படை ஏ.டி.ஜி.பி.யாக மகேஷ் குமார் அகர்வால் நியமிக்கப்பட்டுள்ளார். திருப்பூர் காவல் ஆணையராக லட்சுமி நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஆயுதப்படை ஐ.ஜி.யாக விஜயகுமாரி நியமனம் செய்யப்பட்டுள்ளார். சென்னை தெற்கு மண்டல கூடுதல் காவல் ஆணையராக கண்ணன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.அ

# தென் மாவட்டங்களில் உள்ள ரவுடிகளின் பட்டியல் தயாரிப்பு கண்காணிக்கும் பணி தீவிரம்

சென்னை ஜூலை 11

தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு ஏடிஜிபியாக டேவிட்சன் தேவாசீர்வாதம் பதவியேற்ற நிலையில், நெல்லை, தென்காசி, தூத்துக்குடி ஆகிய தென் மாவட்டங்களில் உள்ள ரவுடிகளின் பட்டியலை தயாரிக்க ஒரு உத்தரவு பிறப்பித்தார். அதன் அடிப்படையில் நெல்லை, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களில் 1,750 ரவுடிகள் அடங்கிய பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதில் சுமார் 400 ரவுடிகள் மட்டுமே சிறையில் இருந்து வெளியில் உள்ளனர். இந்த ரவுடிகளை ஒரு ரவுடிக்கு ஒரு போலீஸ் வீதம் நெருக்கமாக கண்காணிக்க உத்தரவிடப்பட்



டுள்ளது. அவர்களை தொடர் கண்காணிப்பில் வைப்பதற்கு காவலர்கள் 2 ஷிப்ட்டுகளாக நியமிக்கப்பட்டு கண்காணிப்பு பணியை மேற்கொள்ள இருக்கின்றனர்.

ரவுடிகளை கண்காணித்து அவர்களின் நடவடிக்கைகளை தகவல்களாக திரட்டி, காவல் கண்காணிப்பாளரிடம் அறிக்கையாக தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. ரவுடிகளுக்கு உதவினாலும், அடைக்கலம் கொடுத்தாலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தரப்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# இன்ஸ்டாகிராம் காதலனுக்கு வேறு பெண்ணுடன் திருமணம்: மனஉளைச்சலில் இளம்பெண் எடுத்த விபரீத முடிவு

சென்னை, ஜூலை 11
சென்னை எம்.ஜி.ஆர். நகர் பகுதியைச் சேர்ந்த சேகர் என்பவரின் மகள் அனிதா (22 வயது). இவர் அதே பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். இந்த நிலையில் அனிதாவுக்கு சென்னை சின்னமலை பகுதியைச் சேர்ந்த வாலிபர் ஒருவருடன் இன்ஸ்டாகிராம் மூலம் நட்பு ஏற்பட்டுள்ளது. இந்த நட்பு நாளடைவில் காதலாக மாறி, கடந்த 2 ஆண்டுகளாக இருவரும் காதலித்து வந்துள்ளனர். இவர்களுடைய காதல் விவகாரம் அனிதாவின் வீட்டுக்கு தெரியவந்தது.

இதனையடுத்து அவருடைய பெற்றோர் வாலிபர் குறித்து விசாரித்தபோது, அவர் பல்வேறு குற்ற செயல்களில் ஈடுபடுவதாக சிலர் தெரிவித்துள்ளனர். இதனால் அனிதாவின் பெற்றோர் திருமணத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதனைத்தொடர்ந்து அந்த வாலிபர் அனிதாவுடன் பேசுவதை நிறுத்தி கொண்டார்.

இந்த நிலையில் வாலிபர் கடந்த சில நாட்களுக்கு முன்பு வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டார். திருமண கோலத்தில் வேறு ஒரு பெண்ணுடன் இருக்கும் தனது காதலனின் படத்தை அனிதா இன்ஸ்டாகிராமில் பார்த்துள்ளார்.

இதனால் அவர் மிகுந்த மனஉளைச்சலில் இருந்து வந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் மதியம் சாப்பிடுவதற்காக அனிதா வீட்டுக்கு வந்தார். அப்போது நீண்டநேரமாக அவர் அறையை விட்டு வெளியே வராததால், சந்தேகம் அடைந்த அவருடைய பெற்றோர் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் கதவை உடைத்து உள்ளே சென்றனர். அங்கு அனிதா தூக்கில் பிணமாக தொங்குவதை கண்டு அவர்கள் அதிர்ச்சியடைந்தனர். இந்த சம்பவம் குறித்து எம்ஜிஆர் நகர் போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

தகவலின் பேரில் சம்பவ இடத்துக்கு வந்த போலீசார், அனிதாவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கே.கே. நகர் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். தற்கொலை தொடர்பாக அனிதாவின் காதலனிடம் விசாரிக்க போலீசார் திட்டமிட்டுள்ளனர். காதல் தோல்வியால் இளம்பெண் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# காதலித்து கர்ப்பமாக்கிய பெண்ணை ஏற்க மறுப்பு: வாலிபர் மீது போலீசில் புகார்

வேலூர், ஜூலை 11
கோவையை சேர்ந்த 28 வயது இளம்பெண் வேலூர் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் மனு அளித்தார். அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது:

நான் சில மாதங்களுக்கு முன்பு வேலூர் அருகே ஊசூரில் உள்ள உறவினர் வீட்டுக்கு வந்திருந்தேன். அப்போது அதே பகுதியை சேர்ந்த ராஜேஷ் (வயது 28) என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது. பின்னர் நாங்கள் இருவரும் காதலித்து வந்தோம். அவர் என்னை திருமணம் செய்து கொள்வதாக ஆசைவார்த்தை கூறினார். மேலும் அவர் ரகசியமாக எனக்கு தாலி கட்டி என்னுடன் குடும்பம் நடத்தினார். இதனால் நான் கர்ப்பமானேன். தற்போது 7 மாத கர்ப்பமாக உள்ளேன்.

இந்தநிலையில்ராஜேஷ் என்னுடன் வாழ மறுக்கிறார். எனது கர்ப்பத்துக்கும் நான் காரணம் இல்லை என்று கூறுகிறார். தொடர்ந்து நான் ஊர் பிரமுகர்களை அழைத்து பஞ்சாயத்தில் தெரிவித்தேன். அப்போதும் அவர் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை.

மேலும் ஆபாசமாக பேசி, கொலை மிரட்டல் விடுத்து கீழே தள்ளிவிட்டனர். இதற்கு அவரின் குடும்பத்தினரும் உடந்தையாக இருந்தனர். எனவே ராஜேஷ் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டிருந்தது.

இதையடுத்து ராஜேஷ் மற்றும் அவரது குடும்பத்தினர் என 6 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காதலிக்க மறுத்த பெண்ணுக்கு கொலை மிரட்டல்: போலீசார் விசாரணை

கன்னியாகுமரி, ஜூலை 11
கன்னியாகுமரி மாவட்டம் களியக்காவிளை அருகே உள்ள ஐங்காமம் பகுதியை சேர்ந்த இளம்பெண் ஒருவர், திருவனந்தபுரத்தில் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். இதற்காக இவர் தினமும் வீட்டில் இருந்து நடந்து களியக்காவிளை பஸ் நிலையம் சென்று பஸ்சில் வேலைக்கு செல்வது வழக்கம். இவர் வீட்டில் இருந்து புறப்பட்டு செல்லும் போது அதே பகுதியை சேர்ந்த வாலிபர் ஒருவர் அவரை தடுத்து நிறுத்தி தன்னை காதலிக்கும்படி மிரட்டி வந்துள்ளார். ஆனால் அந்த இளம்பெண் காதலிக்க மறுத்துள்ளார்.

இந்தநிலையில் நேற்றும் இளம்பெண்ணிடம் அந்த வாலிபர் தன்னை காதலிக்குமாறு கூறியுள்ளார். அதற்கு மறுப்பு தெரிவித்ததால் வாலிபர் இளம்பெண்ணை தாக்க முயற்சித்துள்ளார். இதனால் பயந்த அவர் சத்தம் போட்டுள்ளார். உடனே அக்கம் பக்கத்தினர் அங்கு ஓடி வந்தனர். அதற்குள் அந்த வாலிபர் இளம்பெண்ணுக்கு கொலை மிரட்டல் விடுத்துவிட்டு தப்பி சென்றுள்ளார். இதுகுறித்து இளம்பெண்ணின் தந்தை களியக்காவிளை போலீசில் புகார் அளித்துள்ளார். அதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.


# இன்ஸ்டாகிராம் காதலனுக்கு வேறு பெண்ணுடன் திருமணம்: மனஉளைச்சலில் இளம்பெண் எடுத்த விபரீத முடிவு

சென்னை, ஜூலை 11
சென்னை எம்.ஜி.ஆர். நகர் பகுதியைச் சேர்ந்த சேகர் என்பவரின் மகள் அனிதா (22 வயது). இவர் அதே பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். இந்த நிலையில் அனிதாவுக்கு சென்னை சின்னமலை பகுதியைச் சேர்ந்த வாலிபர் ஒருவருடன் இன்ஸ்டாகிராம் மூலம் நட்பு ஏற்பட்டுள்ளது. இந்த நட்பு நாளடைவில் காதலாக மாறி, கடந்த 2 ஆண்டுகளாக இருவரும் காதலித்து வந்துள்ளனர். இவர்களுடைய காதல் விவகாரம் அனிதாவின் வீட்டுக்கு தெரியவந்தது.

இதனையடுத்து அவருடைய பெற்றோர் வாலிபர் குறித்து விசாரித்தபோது, அவர் பல்வேறு குற்ற செயல்களில் ஈடுபடுவதாக சிலர் தெரிவித்துள்ளனர். இதனால் அனிதாவின் பெற்றோர் திருமணத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதனைத்தொடர்ந்து அந்த வாலிபர் அனிதாவுடன் பேசுவதை நிறுத்தி கொண்டார்.

இந்த நிலையில் வாலிபர் கடந்த சில நாட்களுக்கு முன்பு வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டார். திருமண கோலத்தில் வேறு ஒரு பெண்ணுடன் இருக்கும் தனது காதலனின் படத்தை அனிதா இன்ஸ்டாகிராமில் பார்த்துள்ளார்.

இதனால் அவர் மிகுந்த மனஉளைச்சலில் இருந்து வந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் மதியம் சாப்பிடுவதற்காக அனிதா வீட்டுக்கு வந்தார். அப்போது நீண்டநேரமாக அவர் அறையை விட்டு வெளியே வராததால், சந்தேகம் அடைந்த அவருடைய பெற்றோர் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் கதவை உடைத்து உள்ளே சென்றனர். அங்கு அனிதா தூக்கில் பிணமாக தொங்குவதை கண்டு அவர்கள் அதிர்ச்சியடைந்தனர். இந்த சம்பவம் குறித்து எம்ஜிஆர் நகர் போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

தகவலின் பேரில் சம்பவ இடத்துக்கு வந்த போலீசார், அனிதாவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கே.கே. நகர் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். தற்கொலை தொடர்பாக அனிதாவின் காதலனிடம் விசாரிக்க போலீசார் திட்டமிட்டுள்ளனர். காதல் தோல்வியால் இளம்பெண் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.


# கூடங்குளம் அணு உலையில் மின் உற்பத்தி திடீர் நிறுத்தம்




நெல்லை, ஜூலை 11
நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் தலா 1,000 மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்ட 2 அணு உலைகள் அமைக்கப்பட்டு மின் உற்பத்தி நடைபெற்று வருகிறது. மேலும் 4 அணு உலைகள் கட்டுமான பணிகள் முழுவீச்சில் நடந்து வருகிறது.

2வது அணு உலையில் எரிபொருள் நிரப்பும் பணி மற்றும் வருடாந்திர பராமரிப்பு பணிக்காக கடந்த மே மாதம் 13ந் தேதி மின் உற்பத்தி நிறுத்தப்பட்டது. அந்த பணிகள் நிறைவு பெற்று நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியளவில் 2வது அணு உலையில் மீண்டும் மின் உற்பத்தி தொடங்கியது. 360 மெகாவாட் மின் உற்பத்தி நடைபெற்று வந்தது.

இந்த நிலையில், மின் உற்பத்தி தொடங்கப்பட்ட சில மணி நேரத்தில் வால்வு பகுதியில் திடீரென்று பழுது ஏற்பட்டது. இதன் காரணமாக மின் உற்பத்தி நிறுத்தப்பட்டது.

பழுது நீக்கும் பணியில் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். ஓரிரு நாட்களில் பழுதை நீக்கி மீண்டும் மின் உற்பத்தி தொடங்கப்படும் என அணுமின் நிலைய வட்டாரம் தகவல் தெரிவித்துள்ளது.

# காஞ்சீபுரம் மேயர் மீது 29ம்தேதி நம்பிக்கையில்லா தீர்மானம்






காஞ்சீபுரம், ஜூலை 11
காஞ்சீபுரம் மாநகராட்சியில் 51 வார்டுகள் உள்ளன. இந்த நிலையில் மாநகராட்சி மேயர், துணை மேயர், 49 மாநகராட்சி உறுப்பினர்கள் பதவியில் உள்ளனர். தி. மு. க .வை சேர்ந்த மகாலட்சுமி யுவராஜ் மாநகராட்சி மேயராகவும், காங்கிரஸ் கட்சியை சேர்ந்த குமரகுருபரன் துணை மேயராகவும் உள்ளனர்.

மாநகராட்சி மேயர் தங்களை உரிய முறையில் மதிக்கவில்லை. தங்கள் வார்டுகளுக்கு தேவையான மக்கள் நல பணிகளை செய்து தரவில்லை என அ. தி. மு. க. , பா. ம. க. , பா. ஜனதா, தமிழ் மாநில காங்கிரஸ், சுயேச்சை, உறுப்பினர்கள் கூறி வந்த நிலையில் தற்போது ஆளும் கட்சியான தி. மு. க. வை சேர்ந்த மாநகராட்சி உறுப்பினர்களும், சேர்ந்து கொண்டு மேயர் மகாலட்சுமி யுவராஜுடன் மோதல் போக்கை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் தி. மு. க. மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என 33 பேர் மாநகராட்சி மேயர் மகாலட்சுமி யுவராஜ் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர வேண்டும் என காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் மற்றும் மாநகராட்சி கமிஷனரிடம் மனு வழங்கி இருந்தனர். இது குறித்து தகவல் அறிந்து நகராட்சி துறை அமைச்சர் கே. என். நேரு மாநகராட்சி உறுப்பினர்கள் மற்றும் மேயரை வரவழைத்து பேச்சு வார்த்தை நடத்தி அனுப்பி வைத்தார்.

இருப்பினும் மாநகராட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து மாநகராட்சி மேயர் மகாலட்சுமி யுவராஜை மாற்ற வேண்டும் என வலியுறுத்தி வந்தனர். இந்த நிலையில் மாநகராட்சி கமிஷனர் செந்தில்முருகன், மாநகராட்சி உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 32, ஆண்டு 2022) பிரிவு 51 (2) (3) படி காஞ்சீபுரம் மாநகராட்சி உறுப்பினர்களால் மாநகராட்சி மேயர் மீது அளிக்கப்பட்டுள்ள, நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது விவாதம் மற்றும் வாக்கெடுப்பு நடத்துவதற்கான கூட்டம் இந்த மாதம் 29ம்தேதி (திங்கட்கிழமை) காலை 10 மணிக்கு மாநகராட்சி கூட்டம் நடைபெற உள்ளது என்றும், மேற்படி கூட்டத்தில் மாநகராட்சி உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என அறிவிப்பு வெளியிட்டு அதற்கான கடிதங்களை மாநகராட்சி கவுன்சிலர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். மாநகராட்சி கவுன்சிலர்கள் விவரம் மொத்தம்: 51 தி.மு.க. 33 காங்கிரஸ் 1 அ.தி.மு.க. 8 த.மா. கா. 1 பா.ம.க. 2 பா.ஜனதா 1 விடுதலை சிறுத்தைகள் கட்சி1 சுயேச்சை 4

# சாக்லேட் வாங்கித்தருவதாக அழைத்துச்சென்று சிறுமிக்கு பாலியல் தொந்தரவு: தொழிலாளிக்கு 20 ஆண்டு சிறை





வேலூர், ஜூலை 11
வேலூர்மாவட்டம் காட்பாடி கிளித்தான்பட்டறை பகுதியை சேர்ந்தவர் அப்துல்கனி (வயது 57), தொழிலாளி. இவர் கடந்த வருடம் விளையாடிக் கொண்டிருந்த தனது நண்பர் ஒருவரின் 7 வயது மகளிடம் நைசாக பேச்சு கொடுத்துள்ளார்.

அப்போது அவர் அந்த சிறுமியிடம் சாக்லேட் தருவதாக கூறி சைக்கிளில் மறைவான இடத்துக்கு அழைத்துச் சென்று பாலியல் தொந்தரவு கொடுத்து, பலாத்கார முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இதைப் பார்த்த பொதுமக்கள் அவரை பிடித்து வேலூர் அனைத்துமகளிர்போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதுதொடர்பான வழக்கு வேலூர் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வந்தது.

இந்த வழக்கில் நேற்று நீதிபதி சிவக்குமார் தீர்ப்பு வழங்கினார். அதில் அப்துல்கனிக்கு, சிறுமியை கடத்திச் சென்றதற்காக 10 ஆண்டுகள் ஜெயில் தண்டனையும் ரூ.10 ஆயிரமும், போக்சோ பிரிவின் கீழ் 20 ஆண்டுகளும், ரூ.10 ஆயிரம் அபராதமும் விதித்து உத்தரவிட்டார். சிறை தண்டனையை ஏக காலத்தில் ஆண்டுகள் அனுபவிக்க வேண்டும் என்றும், அபராத தொகையை கட்ட தவறினால் மேலும் 1 ஆண்டு சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

# படிக்கட்டில் தொங்கியதால் இறக்கிவிட்ட நடத்துநர்: ஆத்திரத்தில் அரசு பஸ் கண்ணாடியை உடைத்த வாலிபர்



மதுரை, ஜூலை 11
மதுரை மாவட்டம் மேலூர் அரசு போக்குவரத்து கிளையை சேர்ந்த டவுன்பஸ் ஒன்று சிவகங்கையில் இருந்து மேலூருக்கு நேற்று காலை வந்தது. அதில் 22 வயதுடைய வாலிபர் ஒருவர் படிக்கட்டில் தொங்கியபடி வந்தார். அவரை உள்ளே வருமாறு நடத்துநர் ராமன் கூறினார். இதனால் அந்த வாலிபர், கண்டக்டரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதையடுத்து பாதிவழியிலேயே வாலிபர் இறக்கிவிடப்பட்டதாக கூறப்படுகிறது.

இதனால் ஆத்திரமடைந்த அந்த வாலிபர் பஸ்சை பின்தொடர்ந்து வந்து மேலூரில் பஸ்சின் முன்பக்க கண்ணாடியை கற்களால் தாக்கி உடைத்துவிட்டு தப்பி விட்டார். இதில் பஸ் டிரைவர் வேலவேந்தன் காயம் அடைந்து மேலூர் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார். இது குறித்த புகாரின்பேரில் மேலூர் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் ரமேஷ்பாபு வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

# என்ஜினீயரிங் படிப்புக்கான தரவரிசை பட்டியல் வெளியாகிறது



சென்னை, ஜூலை 11
202425ம் கல்வியாண்டில் என்ஜினீயரிங் படிப்புகளில் சேருவதற்கான விண்ணப்பப் பதிவு கடந்த மே மாதம் 6ம்தேதி தொடங்கி, கடந்த மாதம் (ஜூன்) 6ம்தேதியுடன் நிறைவு பெற்றது. பின்னர், மேலும் அவகாசம் கேட்டு வந்த கோரிக்கைகளின் அடிப்படையில், கடந்த மாதம் 10 மற்றும் 11ம்தேதிகளில் விண்ணப்பப் பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி, விண்ணப்பப் பதிவு நிறைவு பெற்ற நிலையில், 2 லட்சத்து 53 ஆயிரத்து 954 பேர் விண்ணப்பப் பதிவு செய்து இருந்ததாக தமிழ்நாடு என்ஜினீயரிங் மாணவர் சேர்க்கை அலுவலகம் தெரிவித்தது.

விண்ணப்பப் பதிவு செய்தவர்களில், 2 லட்சத்து 9 ஆயிரத்து 645 பேர் விண்ணப்பக் கட்டணத்தை செலுத்தியும், அவர்களில் ஒரு லட்சத்து 93 ஆயிரத்து 853 பேர் சான்றிதழ்களை பதிவேற்றமும் செய்து இருந்தனர்.

இந்த நிலையில் விண்ணப்பக் கட்டணம் செலுத்தியவர்கள் அனைவருக்கும் ரேண்டம் எண்ணும் கடந்த மாதம் 12ம்தேதி வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து கடந்த மாதம் 13ம்தேதி முதல் 30ம்தேதி வரை சான்றிதழ்களை பதிவேற்றம் செய்தவர்களுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட்டது.

ஏற்கனவே வெளியிட்டு இருந்த அட்டவணைப்படி, விண்ணப்பித்து, கட்டணம் செலுத்தி, சான்றிதழ்களை பதிவேற்றம் செய்தவர்களுக்கான தரவரிசைப் பட்டியல் இன்று (புதன்கிழமை) வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இதற்கிடையில் தரவரிசைப் பட்டியல் வெளியிடுவது தள்ளிப்போவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக சொல்லப்பட்டது. ஆனால் அட்டவணைப்படி, என்ஜினீயரிங் படிப்புக்கான தரவரிசைப் பட்டியல் இன்று காலை 10.30 மணிக்கு வெளியிடப்பட உள்ளது. மேலும் கலந்தாய்வு குறித்த அட்டவணையும் வெளியாக இருக்கிறது.

# கடலூர் அகழாய்வில் வட்டச்சில்லுகள் கண்டெடுப்பு



சென்னை, ஜூலை 11
நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறியிருப்பதாவது:

கடலூர் மாவட்டம் மருங்கூர் அகழாய்வில் வட்டச்சில்லுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தமிழர்கள் பொதுவாக ஓய்வு நேரங்களில் தங்களது பொழுதுப்போக்கிற்காக உடல் உழைப்பு மற்றும் அறிவு சார்ந்த விளையாட்டுகளை விளையாடுவது வழக்கம். மருங்கூரில் வாழ்விடப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வில் கடந்த வாரம் இராசராசன் காலச் செம்புக் காசு ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

தற்போது, பல்வேறு அளவுகளில் சுடுமண்ணால் ஆன வட்டச்சில்லுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பெண்களும் சிறுவர்களும் இந்த வட்டச்சில்லுகளைப் பயன்படுத்தி விளையாடியுள்ளனர். இத்தகைய விளையாட்டுகள் பாண்டி விளையாட்டு என்று தற்போது அழைக்கப்படுகிறது. வட்டச்சில்லுகள் கண்டறியப்பட்டுள்ளதன் வாயிலாகத் தற்போது அகழாய்வு செய்யப்படும் இடம் மக்கள் கூடி வாழ்ந்த ஒரு வாழ்விடப்பகுதிதான் என்பது உறுதியாகின்றது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வருகிற 13ம் தேதி பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம்

சென்னை, ஜூலை 11

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

பொது விநியோகத் திட்டத்தின் பயன்களை குடிமக்கள் எளிதில் பெறும் வகையில் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு வட்டத்திலும் மக்கள் குறைதீர் முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி, ஜூலை 2024 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம் சென்னையில் உள்ள உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 19 மண்டல உதவி ஆணையர் அலுவலகங்களில் 13.07.2024 அன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெற உள்ளது.

குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம், கைபேசி எண் பதிவு மாற்றம் செய்தல் உள்ளிட்ட பொது விநியோகத் திட்டம் தொடர்பான சேவைகள் மேற்கொள்ளப்படும். மேலும், நியாய விலைக் கடைகளில் பொருள் பெற நேரில் வருகை தர இயலாத மூத்த குடிமக்கள் உள்ளிட்டோருக்கு அங்கீகாரச் சான்று வழங்கப்படும்.

மேலும், பொது விநியோகக் கடைகளின் செயல்பாடுகள், தனியார் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளில் குறைபாடுகள் குறித்த புகார்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை பொதுமக்கள் இம்முகாமில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் சென்னையிலுள்ள 19 மண்டல அலுவலகப் பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இச்சேவையினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தண்டவாளத்தில் தலை வைத்து என்ஜினீயர் தற்கொலை காதல் தோல்வி காரணமா?



சேலம், ஜூலை 11

சேலம் மாவட்டம் ஓமலூரை அடுத்த தேக்கம்பட்டி ஊராட்சி தே.கொல்லப்பட்டி பகுதியை சேர்ந்தவர் ஏழுமலை. இவருடைய மனைவி உஷா. ஏழுமலை கடந்த 4 மாதங்களுக்கு முன்பு நடந்த விபத்தில் இறந்துவிட்டார். இந்த தம்பதிக்கு 2 மகன்கள் இருந்தனர். இதில் இளைய மகன் நவீன் குமார் (வயது 22). என்ஜினீயர்.

இதற்கிடையே நவீன்குமார் நேற்று முன்தினம் மாலை உறவினர் ஒருவரை அழைத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் சென்றார். நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பாததால் அதிர்ச்சி அடைந்த தாய் மற்றும் உறவினர்கள் நவீன்குமாரை பல்வேறு இடங்களில் தேடினர். நவீன்குமார் அழைத்து சென்ற உறவினரிடமும் விசாரித்தனர். நவீனை பற்றிய தகவல் தெரியவில்லை.

இந்த நிலையில் சர்க்கரை செட்டிப்பட்டி கிராமம் 4 கால் பாலம் பகுதியில் அவரை தேடிய போது அங்குள்ள சேலம் சென்னை ரெயில்வே பாலத்தின் அருகில் நவீன்குமாரின் மோட்டார் சைக்கிள் நின்றது. இதைப்பார்த்த உறவினர்கள் அவரை அந்த பகுதியில் தேடினர். அவரை காணவில்லை. உடனே அவரது செல்போன் எண்ணுக்கு தொடர்பு கொண்டனர்.

சிறிது தூரத்தில் தண்டவாளத்தில் செல்போன் ஒலிக்கும் சத்தம் கேட்டது.

அங்கு சென்று பார்த்த போது நவீன்குமார் முகம் சிதைந்து உயிரிழந்து கிடந்ததை கண்டு கதறி அழுதனர்.

தகவல் அறிந்த சேலம் ரெயில்வே போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று நவீன்குமாரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக சேலம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில் நவீன்குமார் காதல் தோல்வி காரணமாக விரக்தி அடைந்து தண்டவாளத்தில் தலை வைத்து தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது.

எனினும் தற்கொலைக்கான காரணம் குறித்து தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# ராணுவ வீரரை கழுத்தை நெரித்து கொன்றுவிட்டு நாடகமாடிய மனைவி: பரபரப்பு தகவல்



சென்னை, ஜூலை 11

சென்னை ஆவடியை அடுத்த முத்தாபுதுப்பேட்டை, ராணுவ குடியிருப்பைச் சேர்ந்தவர் வேளாங்கண்ணி தாஸ் (வயது 38). ராணுவ வீரரான இவர், ஆவடியில் செயல்படும் இந்திய ராணுவ படையில் நாயக்காக பணியாற்றி வந்தார். இவரது சொந்த ஊர் திருச்சி. இவரது மனைவி லீமா ரோஸ்மேரி (36). இவர், சென்னைகிண்டியில் உள்ள அரசு ஐ.டி.ஐ.யில் பணியாற்றி வருகிறார்.

இவர்களுக்கு ஒரு மகள் உள்ளார். அவர், திருச்சியில் உள்ள பாட்டி வீட்டில் வசித்து வருகிறார். இதனால் வேளாங்கண்ணி தாஸ், அவரது மனைவி லீமா ரோஸ்மேரி இருவர் மட்டும் இங்கு தனியாக வசித்து வந்தனர்.

வேளாங்கண்ணி தாஸ் கடந்த மே மாதம் 10ந் தேதி இரவு மதுபோதையில் படுக்கை அறையில் சுயநினைவின்றி படுத்திருந்ததாக கூறி அவரது மனைவி லீமா ரோஸ்மேரி, அவரை மீட்டு ஆவடியில் உள்ள ராணுவ ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றார். அங்கு அவரை பரிசோதனை செய்த டாக்டர்கள், வேளாங்கண்ணி தாஸ் ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினர். இதுகுறித்து முத்தாபுதுப்பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து அவரது உடலை பிரேத பரிசோதனைக்காக சென்னை கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இந்தநிலையில் பிரேத பரிசோதனை அறிக்கையில் வேளாங்கண்ணி தாஸ், கழுத்தில் காயம் இருப்பது தெரிய வந்தது. இதனால் சந்தேகமடைந்த போலீசார், அவரது மனைவி லீமா ரோஸ்மேரியிடம் தீவிரமாக விசாரித்தனர். அப்போது அவர், கணவரை கழுத்தை நெரித்து கொன்றுவிட்டு, மதுபோதையில் இறந்ததாக நாடமாடியதாக தெரிவித்தார். இதையடுத்து லீமா ரோஸ்மேரியை போலீசார் கைது செய்தனர். போலீசாரிடம் ரோஸ்மேரி அளித்துள்ள வாக்குமூலம் வருமாறு:

எனது கணவர் தினமும் மது அருந்திவிட்டு போதையில் வீட்டுக்கு வந்து என்னிடம் தகராறில் ஈடுபட்டார். என் பெற்றோரையும் அவதூறாக பேசினார். இதனால் ஆத்திரமடைந்த நான், சம்பவத்தன்று மது போதையில் படுத்திருந்த கணவர் வேளாங்கண்ணி தாசை, புடவையால் கழுத்தை நெரித்து கொலை செய்தேன். பின்னர் மதுபோதையில் சுயநினைவின்றி இறந்து கிடந்ததாக அனைவரிடமும் கூறி நாடகமாடினேன். ஆனால் பிரேத பரிசோதனை அறிக்கையில் அவர் கழுத்தை நெரித்து கொலை செய்யப்பட்டது தெரியவந்ததால் போலீசில் மாட்டிக்கொண்டேன். இவ்வாறு அவர் வாக்குமூலத்தில் கூறி இருப்பதாக போலீசார் தெரிவித்தனர். இதையடுத்து இன்ஸ்பெக்டர் வேலு, இந்த வழக்கை கொலை வழக்காக மாற்றினார். பின்னர் கணவரை கொன்றுவிட்டு நாடகமாடியதாக கைதான லீமா ரோஸ்மேரியை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தார்.

# மின்வாரிய ஊழியர்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்: டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை, ஜூலை 11

பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு மின்வாரியத்தில் காலியாக உள்ள 55000 பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்பது உள்ளிட்ட 20 கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி சென்னை உள்பட தமிழ்நாடு முழுவதும் மின்வாரிய பணியாளர்கள் காத்திருப்புப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர். அவர்களின் கோரிக்கைகளை ஆய்வு செய்வதற்குக் கூட தமிழக அரசு முன்வராதது கண்டிக்கத்தக்கது ஆகும்.

மின்வாரியத்தில் நிரப்பப்படாமல் உள்ள 55 ஆயிரம் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். ஒப்பந்த பணியாளர்களை பணி நிலைப்பு செய்ய வேண்டும். ஓய்வுக்கால பணபலன்களை ஓய்வு பெறும் நாளிலேயே வழங்க வேண்டும். ரூ.5 லட்சம் குடும்ப நல நிதி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட மின்வாரியத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் அனைத்தும் மிகவும் நியாயமானவை. மின்சார வாரியம் செம்மையாக செயல்பட வேண்டும் என்றால் இந்தக் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட வேண்டியது கட்டாயம் ஆகும்.

மின்வாரிய தொழிலாளர்களின் கோரிக்கைகள் எதுவும் புதிதாக முன்வைக்கப்படுபவை அல்ல. இவை அனைத்தும் பல ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டு வருபவை தான். இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று பல முறை வலியுறுத்தியுள்ளார். அப்போது நியாயமாக தெரிந்த கோரிக்கைகள் இப்போது நியாயமானவையாக தெரியவில்லையா? அவை நியாயமான கோரிக்கைகள் என்று கடந்த காலத்தில் கூறிய முதல்அமைச்சர், இப்போது அவற்றை நிறைவேற்ற மறுப்பது ஏன்? தொழிலாளர் நல ஆணையத்தில் நேற்று நடைபெற்ற பேச்சுகளின் போது இந்த கோரிக்கைகளை ஆய்வுக்குக் கூட எடுத்துக் கொள்ள மறுத்தது ஏன்?.

தமிழ்நாட்டில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களைக் கொண்ட பொதுத்துறை நிறுவனம் மின்வாரியம் தான். அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகின்றன.

ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கான ஓய்வூதியம் மீது 100 மாதங்களுக்கும் மேலாக அகல்விலைப்படி உயர்வு வழங்கப்படவில்லை. அதே நிலை மின்சார வாரியத்திற்கும் வந்து விடக்கூடாது. மின்சார வாரியத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் குறித்து அனைத்துத் தொழிற்சங்க நிர்வாகிகளையும் அழைத்து பேச்சு நடத்தி, அவற்றை நிறைவேற்ற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# கள்ளக்காதலி வீட்டில் டிரைவர் தற்கொலை

பண்ருட்டி, ஜூலை 11

கடலூர் மாவட்டம் பண்ருட்டி சத்தியமூர்த்தி தெருவை சேர்ந்தவர் சங்கர் மகன் சூர்யா (வயது 27). கார் டிரைவர். இவருக்கு திருமணமாகி மனைவி மற்றும் ஒரு மகன் உள்ளனர். இந்த நிலையில் சூர்யாவிற்கும் பண்ருட்டி பகுதியை சேர்ந்த ஒரு இளம்பெண்ணுக்கும் கள்ளத்தொடர்பு இருந்து வந்ததாக கூறப்படுகிறது. அந்த இளம் பெண்ணின் வீட்டுக்கு சூர்யா சென்றார். அப்போது அவருக்கும் அந்த பெண்ணுக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டதாக தெரிகிறது. இதில் மனமுடைந்த சூர்யா அந்த பெண் வீட்டிலேயே தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்த தகவலின் பேரில் பண்ருட்டி போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று சூர்யாவின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து இது குறித்த புகாரின் போலீஸ் இன்ஸ்பெக்டர் கண்ணன் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# மதுரையில் பயங்கரம்: வீட்டில் தனியாக இருந்த மூதாட்டியை கொன்று 65 பவுன் நகைகள் கொள்ளை



மதுரை, ஜூலை 11

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே உள்ள வாகைக்குளம் மாயன்நகர் பகுதியை சேர்ந்தவர் தங்கராசு. இவருடைய மனைவி காசம்மாள் (வயது 65). இவர்களுக்கு 2 மகன்களும், ஒரு மகளும் உள்ளனர். மகன்கள் பாண்டியராஜன், பரசுராமன். இவர்கள் இருவரும் மராட்டிய மாநிலத்தில் வேலை பார்த்து வருகின்றனர்.

மகள் பாண்டியம்மாள். இவர் நாகமலை புதுக்கோட்டை அருகே உள்ள ராஜம்பாடி கிராமத்தில் கணவருடன் வசித்து வருகிறார். தங்கராசு விபத்தில் காயமடைந்து மகள் வீட்டில் தங்கி சிகிச்சை பெற்று வந்தார். இதனால் காசம்மாள் மட்டும் வாகைக்குளம் வீட்டில் தனியாக இருந்தார்.

இந்த நிலையில், நேற்று காலை நீண்ட நேரமாகியும் காசம்மாள் வீட்டை விட்டு வெளியே வரவில்லை. ஆனால் கதவு திறந்து கிடந்தது. இதனால் சந்தேகம் அடைந்த அக்கம்பக்கத்தினர் வீட்டின் உள்ளே சென்று பார்த்தனர். அப்போது வீட்டுக்குள் கழுத்து அறுபட்ட நிலையில் காசம்மாள் ரத்த வெள்ளத்தில் பிணமாக கிடந்தார். இதைக்கண்டு அதிர்ச்சி அடைந்த அவர்கள், சிந்துபட்டி போலீசாருக்கு தகவல் அளித்தனர். அதன் பேரில் திருமங்கலம் துணை சூப்பிரண்டு அருள் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

வீட்டில் பீரோவும் உடைக்கப்பட்டு திறந்து கிடந்தது. இதனால் நகைக்காக காசம்மாள் கழுத்தை அறுத்து கொலை செய்யப்பட்டு இருக்கலாம் என தெரியவந்தது. காசம்மாள் கழுத்தில் 15 பவுன் சங்கிலி அணிந்து இருந்ததாகவும், பீரோவில் 50 பவுன் நகை இருந்ததாகவும் அவருடைய குடும்பத்தினர் கூறினர். எனவே காசம்மாளை கொலை செய்த கும்பல், 65 பவுன் நகைகளை கொள்ளையடித்துக் கொண்டு தப்பிச்சென்றதும் விசாரணையில் தெரியவந்தது.

இந்த படுகொலை மற்றும் கொள்ளையில் தொடர்புடைய மர்ம நபர்களை விரைந்து பிடிக்க மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அரவிந்த் உத்தரவிட்டார். போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி, கொலையாளிகளை வலைவீசி தேடி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# மாநகர பஸ், மெட்ரோ ரெயிலில் ஒரே டிக்கெட்டில் பயணிக்கும் வசதி: டிசம்பரில் அமலாகிறது



சென்னை, ஜூலை 11

சென்னையில், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள், அண்டை மற்றும் வட மாநிலங்களில் இருந்தும் வேலைவாய்ப்பு, உயர் கல்வி காரணமாக அதிக அளவிலான மக்கள் வசித்து வருகின்றனர்.

இந்த சென்னை வாழ் மக்கள் தங்கள் அலுவலகங்கள், பள்ளி, கல்லூரிகளுக்கு செல்வதற்கு சென்னை மாநகர போக்குவரத்து கழக பஸ்கள், மின்சார ரெயில்கள் மற்றும் மெட்ரோ ரெயில் சேவைகளை பயன்படுத்தி வருகின்றனர். இதில், சிலர் தங்கள் அலுவலகம் செல்வதற்கு 3 வித போக்குவரத்து சேவைகளையும் பயன்படுத்தி வருகின்றனர். தற்போது, இந்த 3 வித சேவைகளுக்கும் தனித்தனியே டிக்கெட் பெற்று பயணிக்க வேண்டிய நிலை உள்ளது.

இந்த நிலையில், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இருந்து நாள்தோறும் பணிக்கு செல்லும் லட்சக்கணக்கான மக்களின் சிரமத்தை குறைக்கும் வகையில் 3 வித போக்குவரத்து சேவையையும் ஒரே டிக்கெட்டில் பயணிக்கும் வகையில் சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்து குழுமம் ஒரு திட்டத்தை செயல்படுத்த உள்ளது.

அதில், முதல் கட்டமாக இந்த திட்டத்தின் கீழ் மாநகர பஸ்கள் மற்றும் மெட்ரோ ரெயில் சேவையை ஒருங்கிணைத்து ஒரே டிக்கெட்டில் இந்த 2 சேவைகளையும் பயன்படுத்தும் வகையில் புதிய செயலி உருவாக்கப்பட்டு ஒரே டிக்கெட் முறை அமலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக பெங்களூருவை சேர்ந்த மூவிங் டெக் இன்னொவேஷன்ஸ் என்ற நிறுவனத்துக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில், அடுத்த ஆண்டு மார்ச் மாதம் மின்சார ரெயில் சேவை உள்பட 3 வகை போக்குவரத்திலும் ஒரே டிக்கெட்டை பயன்படுத்தும் வகையில் இந்த திட்டம் விரிவுபடுத்தப்படும் என்றும் கூறப்படுகிறது.

# கள்ளக்குறிச்சியில் 73 காவலர்கள் கூண்டோடு பணியிட மாற்றம்




கள்ளக்குறிச்சி, ஜூலை 11

கள்ளக்குறிச்சியில் விஷ சாராயம் குடித்து 60க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்த விவகாரம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த நிலையில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 5 உதவி ஆய்வாளர்கள் உள்பட 73 காவலர்களை கூண்டோடு பணியிட மாற்றம் செய்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரஜத் சதுர்வேதி உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை, திருக்கோவிலூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் பணியாற்றி வந்த 39 காவலர்கள் அதிரடியாக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் 34 காவலர்கள் அமலாக்கப் பிரிவில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

# அம்மா, அப்பா மன்னித்து விடுங்கள்.. எனக்கு வேற வழி தெரியல.. கடிதம் எழுதி வைத்துவிட்டு வாலிபர் தற்கொலை



விழுப்புரம், ஜூலை 11

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் ஜக்காம்பேட்டை பஸ்நிறுத்தத்தில் 35 வயதுடைய வாலிபர் ஒருவர் நேற்று காலை பிணமாக கிடந்தார். அவரது வாயில் இருந்து நுரை வெளியேறியபடி இருந்தது. இதைப்பார்த்த அப்பகுதி மக்கள், மயிலம் போலீஸ் நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் போலீசார் விரைந்து சென்று பார்வையிட்டனர்.

பின்னர் அவரது உடலை பிரேத பரிசோதனைக்காக விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதையடுத்து இறந்து கிடந்தவர் யார்?, எந்த ஊரை சேர்ந்தவர்? என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தினர். விசாரணையில் பரபரப்பு தகவல் வெளியானது.

அதுபற்றிய விவரம் வருமாறு:

கடலூர் மஞ்சக்குப்பம் பாஷியம் தெருவை சேர்ந்த சிவராஜ் மகன் ஜெயபிரகாஷ் (வயது 35). பி.எஸ்சி. வேதியியல் படித்துள்ள இவர் கடந்த 6 மாதத்துக்கு முன்பு ஆந்திர மாநிலம் நாயுடுபேட்டையில் உள்ள ஒரு அமில தொழிற்சாலையில் ஊழியராக பணியில் சேர்ந்தார். பின்னர் தொழிற்சாலையில் விடுமுறை எடுத்துக் கொண்டு கடந்த 1ந் தேதி வீட்டிற்கு வந்தார்.

விடுமுறை முடிந்ததும் கடந்த 4ந் தேதி இரவு 7 மணிக்கு வேலைக்காக ஆந்திராவுக்கு செல்வதாக பெற்றோரிடம் கூறிவிட்டு சென்றார். அதன்பிறகு அவரது செல்போன் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் திண்டிவனம் ஜக்காம்பேட்டை பஸ் நிறுத்தத்தில் ஜெயபிரகாஷ், விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். முன்னதாக அவர், புதுச்சேரியில் இருந்து தனது பெற்றோருக்கு கூரியர் மூலம் பார்சல் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் ஜெயபிரகாசின் ஏ.டி.எம். கார்டு, தொழிற்சாலையில் பணிபுரிந்ததற்கான அடையாள அட்டை, ஜெயபிரகாஷ் எழுதிய கடிதம் ஆகியவை இருந்தன.

அந்தகடிதத்தில், அம்மா என்னை மன்னித்து விடுங்கள். எனக்கு வேற வழி தெரியல. செய்த தப்புக்கு நான் அசிங்கப்படலாம். நீங்கள் என்ன பண்ணுவிங்க. என்னோட மனநிலையை கட்டுப்படுத்த முடியல. இதுக்கு மேல நான் சரியாக இருப்பனானு தெரியல. பிரச்சினை எல்லாம் சரியாகுமான்னும் தெரியல. அப்பாவையும் ரொம்ப கஷ்டப்படுத்துகிறேன்.

பிரியாவும் எவ்வளவு தான் பொறுத்து போகும். உங்களை பிரிந்து சத்தியமாக என்னால இருக்க முடியாது. ஆனால் வீட்டுக்கு சத்தியமாக வரமாட்டேன்.

இந்த கடிதத்தை நீங்கள் படிக்கும்போது நான் இருப்பேனா என்று தெரியவில்லை. நான் சாகுறதுக்கு பூச்சி மருந்து வாங்கி வைத்திருக்கிறேன். இப்போது குடிக்கப்போகிறேன். நானும் என்னை திருத்திக்கிட்டு நல்லா இருக்கனும்னுதான் நினைத்தேன். ஆனால் முடியல. அம்மா, அப்பா மன்னித்து விடுங்கள். பிரியா சாரி டா. நான் எங்கையாவது கண்ணுக்கு தெரியாத இடமா போயிட்டு செத்துடுறேன். எனக்கு கடைசியா உங்ககிட்ட பேசனும்னு ஆசை தான். ஆனால் பேசினால் என்னோட மனசு மாறிவிடும். அதனால் பேசல என்று கூறப்பட்டு இருந்தது.

இதைபார்த்து பெற்றோர் அதிர்ச்சி அடைந்தனர். அடுத்த சில நிமிடங்களில் மயிலம் போலீசார், ஜெயபிரகாசை செல்போனில் தொடர்பு கொண்டு, தங்களது மகன் தற்கொலை செய்து கொண்டதாக கூறினர். இதையடுத்து பெற்றோர் பதறியடித்துக்கொண்டு கதறி அழுதபடி மயிலத்துக்கு சென்றனர். இந்த சம்பவம் தொடர்பாக மயிலம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
11.7.2024

# 'ஜமா' படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியீடு!



'கூழாங்கல்' திரைப்படத்தை உருவாக்கிய லெர்ன் அண்ட் டெக்புரோடக்சன்நிறுவனம்தமிழ்நாட்டில்உள்ளதெருக்கூத்து கலைஞர்களின் வாழ்க்கைமுறை மற்றும் சவால்களை மையமாக வைத்து 'ஜமா' என்ற மற்றொரு யதார்த்தமான படத்துடன் சினிமா ரசிகர்களை கவரத் தயாராக உள்ளது. பாரி இளவழகன் இந்தப் படத்தை இயக்கி முக்கிய கதாபாத்திரத்திலும் நடித்துள்ளார்.

தமிழ்நாட்டின்பாரம்பரியம்மற்றும்அழகியல்கலாச்சாரமான தெருக்கூத்தை மையமாக வைத்து இப்படம் உருவாகியுள்ளதாக அவர் கூறுகிறார். 'ஜமா' என்ற தலைப்பு தெருக்கூத்து நாடகக் கலைஞர்களின் குழுவைக் குறிக்கிறது. இந்தக் கதை அவர்களின் அனுபவங்களை மையமாகக் கொண்டு திருவண்ணாமலையில் நடந்ததாக படமாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, நாடகத்தின் போது ஆண் கலைஞர்கள் இந்தக் கலைக்காக பெண் வேடமிடும்போது, அவர்கள் அனுபவிக்கும் உணர்ச்சி, மனதின் மாற்றங்கள் மற்றும் சமூகத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இந்தப் படம் விவரிக்கிறது. திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மற்றும் சில இடங்களில் தெருக்கூத்தின் கலாச்சாரம் முக்கிய பங்கு வகிக்கிறது.

\பிரபல தெருக்கூத்து கலைஞர் கலைமாமணி தாங்கல் சேகர் நடிகர்களுக்கு தெருக்கூத்து பயிற்சி அளித்தார். இசையமைப்பாளர் இசைஞானி இளையராஜா பாடல்களில் மிகைப்படுத்தலை தவிர்த்து, உண்மையான தெருக்கூத்து இசையைப் பயன்படுத்தியதால் படம் இயல்பாக வந்துள்ளது. 'அவதாரம்' படத்திற்குப் பிறகு இந்த வகையான இசையை அவர் மீண்டும் தேர்வு செய்துள்ளார்.

அம்மு அபிராமி, சேத்தன் உள்ளிட்ட நடிகர்கள் நடித்துள்ளனர். கோபால கிருஷ்ணா ஒளிப்பதிவு செய்கிறார். பார்த்தா எம்.ஏ. படத்தொகுப்பாளராகவும், ஸ்ரீகாந்த் கோபால் கலை இயக்குநராகவும் பணியாற்றுகிறார். விரைவில் இந்த படம் வெளியாக உள்ளது.



# தனுஷின் 'ராயன்' படத்திற்கு 'ஏ' சான்றிதழ்

நடிகர் தனுஷ் தனது 50 வது படத்தை அவரே இயக்கி நடித்துள்ளார். இப்படத்துக்கு 'ராயன்' எனபெயரிடப்பட்டுள்ளது. சன் பிக்சர்ஸ் தயாரிக்கும் இப்படத்துக்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்கிறார். இந்த படத்தில் எஸ்.ஜே.சூர்யா, செல்வரா கவன், பிரகாஷ்ராஜ், காளிதாஸ் ஜெயராம், சுதீப் கிசன், துஷாரா விஜயன் என நட்சத்திர பட்டாளத்தையே களமிறக்கியுள்ளார் தனுஷ். இப்படத்தின் அடுத்தடுத்த போஸ்டர்கள் வெளியாகி ரசிகர்களிடையே படத்தின் மீதான எதிர்பார்ப்பை எகிறச் செய்துள்ளது. சமீபத்தில் இந்த படத்தின் இசைவெளியீட்டு விழா நடைபெற்றது. இந்த நிலையில், ராயன் படத்திற்கு சென்சாரில் 'ஏ' சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. கேங்ஸ்டர் கதைக்களத்தில் உருவாகி உள்ள இப்படம் ஜூலை மாதம் 26ந் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

# யோகி பாபு நடிக்கும் 'கான்ஸ்டபிள் நந்தன்'



தமிழ் சினிமாவில் நகைசுவை கதாபாத்திரங்களில் தனக்கென தனி பாணியை உருவாக்கியவர் நகைச்சுவை நடிகர் யோகிபாபு. பிரபல தனியார் தொலைக்காட்சியில் இடம்பெற்றலொள்ளுசபாநிகழ்ச்சியில் அறிமுகமாகி, அதன் பின்னர் சின்ன சின்ன காமெடி காட்சிகளில் நடித்து வந்த யோகி பாபு தற்போது நகைச்சுவையில் முன்னணி நடிகராக திகழ்கிறார். இவரது நடிப்பில் வெளியான கோலமாவு கோகிலா, மண்டேலா, கூர்கா, மாவீரன் மற்றும் ஜெயிலர் உள்ளிட்ட திரைப்படங்கள் மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது. இதனைத் தொடர்ந்து கடந்த வருடம் அட்லீயின் இயக்கத்தில் வெளியான ஜவான் படத்திலும் அறிமுகமாகி தனது இருப்பை பாலிவுட்டிலும் உறுதி செய்தார் யோகி பாபு. தற்போது தனது அடுத்த படத்தின் படிப்பிடிப்பை தொடங்கியுள்ளார். அறிமுக இயக்குனர் பூபால நடேசன் இந்தப்படத்தை இயக்குகிறார். இதில் யோகி பாபு போலீஸ் கான்ஸ்டபிள் கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இந்தப்படத்திற்கு 'கான்ஸ்டபிள் நந்தன்' என்று பெயரிடப்பட்டுள்ளது. காவல்துறையில் அதிக கருணையுடன் ஒருவர் இருந்தால் என்ன நடக்கும் என்பதுதான் படம். இப்படத்தை சங்கர் பிக்சர்ஸ் சார்பில் டி. சங்கர் தயாரிக்க உள்ளார். சுந்தர் சி, சசிகுமார் மற்றும் மு.களங்கியம் ஆகியோரின் உதவி இயக்குனராக பூபால நடேசன் பணிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. திருவண்ணாமலையில் இந்த படத்தின் படப்பிடிப்பு பூஜையுடன் தொடங்கியுள்ளது.

# சர்ச்சை பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்த சமந்தா



நடிகை சமந்தா மயோசிடிஸ் பாதிப்பு காரணமாக சிகிச்சை பெற்று வருகிறார். சமீப காலமாக அவர் எடுத்து வரும் சிகிச்சை மற்றும் மருத்துவம் பற்றி பாட்காஸ்ட் மூலம் பகிர்ந்து வருகிறார். இது ,'என்னைபோல் பாதிக்கப்பட்டோருக்கு உதவும் என்பதற்காக எனக்கு மருத்துவர்கள் பரிந்துரை செய்த விஷயங்களை தன் பகிர்ந்து கொள்கிறேன் என்று கூறியிருந்தார்.

சமூக ஊடகங்களில் தி லிவர் டாக் என்று அழைக்கப்படும் ஹெபடாலஜிஸ்ட் மெடிக்கல் இன்ப்ளூயன்ஸர் ஒருவர் நடிகை சமந்தா குறித்த பதிவை தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அதாவது, சமந்தா தனது போட்காஸ்ட் டேக் 20 ல் ஹைட்ரஜன் பெராக்சைடு மற்றும் காய்ச்சி வடிகட்டிய நீரை வைரஸ் தொற்றுக்கு மாற்று சிகிச்சைக்கு பயன்படுத்தலாம் என பதிவிட்டதற்கு, டாக்டர் சமந்தாவை "உடல்நலம் மற்றும் அறிவியல் படிப்பறிவற்றவர்" என்று பதிவிட்டுள்ளார், "பகுத்தறிவு மற்றும் முற்போக்கான சமூகத்தில்" இதுபோன்ற கூற்றுக்களை செய்ததற்காக அவரை சிறையில் அடைக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும்,"சமந்தாவின்உடல்நிலையைநான்புரிந்துகொண்டுஅனுதாபப்படுகிறேன்,செய்திதெரிவிக்கப்பட்ட விதத்தில் சங்கடமாகவோ அல்லது மோசமாகவோ உணர்ந்தால் நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன் என்றும், தவறான மருத்துவ தகவலை மாற்றி சரியான தகவலை தருவதே எனது நோக்கம்" என்று டாக்டர் பதிவிட்டிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் விதமாக "நிறைய சோதனை மற்றும் பிழைகளுக்குப் பிறகு தனக்கு அற்புதமாக சிகிச்சைகள் கிடைத்ததாக விளக்கினார். டி.ஆர்.டி.ஒ.வில் 25 ஆண்டுகள் பணியாற்றிய உயர் தகுதி வாய்ந்த மருத்துவரால் இந்த சிகிச்சை எனக்கு பரிந்துரைக்கப்பட்டது. வழக்கமான மருத்துவமாக இல்லாமல் மாற்று சிகிச்சை பரிந்துரையை தேர்ந்தெடுத்ததாக கூறினார். இருப்பினும், நான் மருத்துவ ஆலோசனைகள் குறித்து அதிக கவனமாக இருப்பேன்" என்று நடிகை சமந்தா கூறியுள்ளார்.

# ஓ.டி.டி.யில் வெளியாகும் திரிஷாவின் 'பிருந்தா' வெப் தொடர்



மவுனம் பேசியதே, சாமி, கில்லி, ஆறு, குருவி, 96 உள்ளிட்ட பல படங்களில் நடித்து தனக்கான ரசிகர்கள் பட்டாளத்தை உருவாக்கி கொண்டவர் திரிஷா. இயக்குனர் மணிரத்னம் இயக்கத்தில் வெளியான 'பொன்னியின் செல்வன்' திரைப்படத்தில் திரிஷா நடித்த குந்தவை கதாபாத்திரம் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

தொடர்ந்து திரிஷா 'லியோ' படத்தில் விஜய்க்கு ஜோடியாக நடித்தார். இந்நிலையில், திரிஷா மலையாள படங்களிலும்நடித்துவருகிறார்.தற்போது இவர் சூர்யா மனோஜ் வாங்கலா இயக்கிய தெலுங்கு மொழி வெப் தொடரில் நடித்துள்ளார். இது இந்தி, கன்னடம், மலையாளம், தமிழ், மராத்தி மற்றும் பெங்காலி மொழிகளில் வெளியிடப்பட உள்ளது. இந்த தொடருக்கு 'பிருந்தா' என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்த தொடரில் திரிஷா போலீஸ் வேடத்தில் நடித்திருக்கிறார். மேலும் இந்திரஜித் சுகுமாரன், ஜெய பிரகாஷ், மணி, ரவீந்திர விஜய், ஆனந்த் சாமி, ராகேந்து மவுலி உட்பட பல இந்த தொடரில் நடித்துள்ளனர். ஆஷிஷ் தயாரித்த இந்தத் தொடருக்கு, சக்தி காந்த் கார்த்திக் இசையமைத்துள்ளார்.

இந்தத் தொடர் ஆகஸ்ட் 2ந் தேதி சோனி ஓ.டி.டி தளத்தில் வெளியாக உள்ளது. மேலும் திரிஷா தமிழில் 'விடாமுயற்சி' மற்றும் 'தக் லைப்', தெலுங்கில் 'விஸ்வம்பர', மலையாளத்தில் 'ராம் அண்ட் ஐடென்டிட்டி' ஆகிய படங்களில் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மதிப்புமிக்க பொறுப்புடன் மீண்டும் இந்திய அணிக்குள் வருவதில் பெருமைகொள்கிறேன் கவுதம் கம்பீர்



இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்த ராகுல் டிராவிட்டின் பதவிக்காலம் சமீபத்தில் நடைபெற்று முடிந்த டி20 உலகக்கோப்பையுடன் முடிவுக்கு வந்தது. கோப்பையை வென்ற நிலையில், தனது பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தார். மேற்கொண்டு பணியில் தொடர அவர் ஆர்வம் காட்டவில்லை.

இதனால் டி20 உலகக்கோப்பை தொடருக்கு முன்னதாகவே புதிய பயிற்சியாளரை தேடும் பணியில் பிசிசிஐ. இறங்கியது. அதில் கவுதம் கம்பீர், ஆஷிஷ் நெஹ்ரா உள்ளிட்ட முன்னாள் வீரர்களுடன் பிசிசிஐ பேச்சு வார்த்தை நடத்தியதாக தகவல்கள் வெளியாகின. இருப்பினும் அதில் கவுதம் கம்பீருக்கே முன்னுரிமை அளிக்கப்படுவதாக கூறப்பட்டது.

மேலும் பயிற்சியாளர் பதவிக்கு அவர் விண்ணப்பம் மட்டுமே ஏற்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. ஆனால் பயிற்சியாளர் பதவிக்கு நடத்தப்பட்ட நேர்காணலில் கம்பீருக்கு போட்டியாக யாரும் எதிர்பாராத விதமாக தமிழகத்தை சேர்ந்த முன்னாள் வீரரான டபிள்யூ.வி. ராமனும் கலந்து கொண்டார். இதனால் யார் அடுத்த தலைமை பயிற்சியாராக வருவார்? என்ற எதிர்பார்ப்பு அனைவரிடமும் காணப்பட்டது. இதனிடையே கம்பீர்தான் அடுத்த தலைமை பயிற்சியாளர் என்ற செய்திகளும் வெளிவந்தன. இந்நிலையில் அனைவரின் கருத்துகளின் படியே, இந்தியகிரிக்கெட்அணியின்புதியதலைமைபயிற்சியாளராககவுதம்கம்பீர்அதிகாரபூர்வமாகநியமிக்கப்பட்டுள்ளார். ராகுல் டிராவிட் ஓய்வு பெற்ற நிலையில் கவுதம் கம்பீரை புதிய தலைமை பயிற்சியாளராக பிசிசிஐ செயலாளர் ஜெய் ஷா நியமித்துள்ளார். அதன்பின்னர் தலைமை பயிற்சியாளர் கவுதம் கம்பீர் கூறியதாவது:

இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக பொறுப்பேற்பதில் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். இந்தியா எனது அடையாளம். எனது நாட்டிற்கு சேவை செய்வது என் வாழ்க்கையின் மிகப்பெரிய பாக்கியமாகும். மதிப்புமிக்க வேறொரு பொறுப்புடன் மீண்டும் இந்திய அணிக்குள் வருவதில் பெருமை கொள்கிறேன். ஒவ்வொரு இந்தியரும் பெருமைப்பட வேண்டும் என்பதே எனது குறிக்கோள். 140 கோடி இந்தியர்களின் கனவுகளை தோள்களில் சுமக்கும் வீரர்களுடன் இணைந்து, அதனை நனவாக்க என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன். இவ்வாறு அவர் கூறினார்.

# 8 ஆண்டுகளுக்கு முன்பே என் வாழ்வின் முக்கியமான கேட்சை பிடித்துவிட்டேன் சூர்யகுமார் யாதவ் பதிவு வைரல்



அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீசில் நடைபெற்ற ஐ.சி.சி.9வதுடி20உலகக்கோப்பைதொடரைஇந்தியாகைப்பற்றியது. இதில் கடந்த மாதம் 29ம் தேதி நடைபெற்ற இந்த தொடரின் இறுதிப்போட்டியில் இந்திய அணி 7 ரன் வித்தியாசத்தில் தென்ஆப்பிரிக்காவை வீழ்த்தி 2வது முறையாக கோப்பையை உச்சிமுகர்ந்தது. இதில் இந்தியா நிர்ணயித்த 177 ரன் இலக்கை நோக்கிஆடியதென்ஆப்பிரிக்காஒருகட்டத்தில்4விக்கெட்டுக்கு 151 ரன்களுடன் வலுவான நிலையில் இருந்தது. அப்போது அந்த அணிக்கு 24 பந்தில் 26 ரன் மட்டுமே தேவையாக இருந்தது.

ஆனால் ஹென்ரிச் கிளாசெனின் (5 சிக்சர், 2 பவுண்டரியுடன் 52 ரன்) விக்கெட்டை பாண்ட்யா கழற்றியது, 18வது ஓவரில் பும்ரா ஒரு விக்கெட் எடுத்து 2 ரன் மட்டுமே வழங்கி மிரட்டியது, இறுதி ஓவரின் முதல் பந்தில் டேவிட் மில்லர் (21 ரன்) தூக்கியடித்த பந்தை எல்லைக்கோடு அருகே மிக லாகவமாக சூர்யகுமார் பிடித்தது இப்படி திக்...திக்...திக் திருப்பங்களுடன் ஆட்டமும் இந்தியா பக்கம் சாய்ந்தது. 20 ஓவர்களில் தென்ஆப்பிரிக்க அணி 8 விக்கெட்டுக்கு 169 ரன்னில் அடங்கி கோப்பையை கோட்டை விட்டது. சூர்யகுமார் யாதவ் பிடித்த அந்த கேட்ச் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

அதனால் சூரியகுமார் பிடித்தது கேட்ச் அல்ல உலகக்கோப்பை என்று இந்திய ரசிகர்களும் முன்னாள் வீரர்களும் பாராட்டி வருகின்றனர்.

இந்நிலையில் டி20 உலக கோப்பையில், தான் பிடித்தது தனது வாழ்க்கையின் முக்கியமான கேட்ச் அல்ல என்று தனது சமூக வலைதள பக்கத்தில் சூரியகுமார் யாதவ் பதிவு ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

அதன்படி அவர் வெளியிட்டுள்ள அந்த பதிவில் சூர்யகுமார் மற்றும் அவருடைய மனைவி தேவிஷா ஷெட்டி ஆகியோரது திருமண நாள் புகைப்படத்தை பதிவு செய்து, அதில், "டி20 உலகக்கோப்பையில் நான் பிடித்த அந்த கேட்ச் நேற்றுடன் எட்டு நாட்களை நிறைவு செய்தது. ஆனால் என்னுடைய வாழ்நாளின் முக்கியமான கேட்சை நான் எட்டு ஆண்டுகளுக்கு முன்பே பிடித்து விட்டேன்" என்று பதிவிட்டுள்ளார். இந்த பதிவு தற்போது வைரலாகி வருகிறது.

# டி.என்.பி.எல்.: வாசீம் அகமது, சஞ்சய் அதிரடி... திருச்சி 193 ரன்கள் குவிப்பு



தமிழ்நாடு பிரீமியர் லீக் (டி.என்.பி.எல்.) தொடரில் இன்று நடைபெற்று வரும் ஆட்டத்தில் திருச்சி கிராண்ட் சோழாஸ் சீகம் மதுரை பாந்தர்ஸ் அணிகள் விளையாடி வருகின்றன. இதில் டாஸ் வென்ற மதுரை பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த திருச்சி அணிக்கு தொடக்க ஆட்டக்காரர் ஆன அர்ஜுன் மூர்த்தி 1 ரன்னில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். அவரை தொடர்ந்து களமிறங்கிய ஷியான் சுந்தர் 30 ரன்களில் ஆட்டமிழந்தார். ஆனால் மற்றொரு தொடக்க ஆட்டக்காரர் ஆன வாசீம் அகமது ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடினார். இதன்பின் வாசீம் அகமதுவுடன் சஞ்சய் யாதவ் கை கோர்த்தார். இருவரும் அதிரடியில் மிரட்ட அணியின் எண்ணிக்கை மளமளவென உயர்ந்தது. இவர்களின் அதிரடியால் திருச்சி 20 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 193 ரன்கள் குவித்துள்ளது. அதிகபட்சமாக வாசீம் அகமது 90 ரன்களும், சஞ்சய் யாதவ் 60 ரன்களும் குவித்தனர். மதுரை தரப்பில் குர்ஜப்னீத் சிங் மற்றும் அலெக்சாண்டர் தலா 1 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

இதனையடுத்து 194 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி மதுரை களமிறங்க உள்ளது.

# விம்பிள்டன் டென்னிஸ்: டோனா வெக்கிச் அரையிறுதிக்கு முன்னேற்றம்



'கிராண்ட்ஸ்லாம்' என்ற உயரிய அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டனில் நடந்து வருகிறது. இந்த தொடரில் இன்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி சுற்று ஆட்டம் ஒன்றில் குரோஷியாவின் டோனா வெக்கிச், நியூசிலாந்தின் லுலு சன் உடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய டோனா வெக்கிச் 57, 64, 61 என்ற செட் கணக்கில் நியூசிலாந்தின் லுலு சன்னை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

# இந்திய கிரிக்கெட் அணிக்கு புதிய தலைமை பயிற்சியாளர் நியமனம்

இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்த ராகுல் டிராவிட்டின் பதவிக்காலம் சமீபத்தில் நடைபெற்று முடிந்த டி20 உலகக்கோப்பையுடன் முடிவுக்கு வந்தது. கோப்பையை வென்ற நிலையில், தனது பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தார். மேற்கொண்டு பணியில் தொடர அவர் ஆர்வம் காட்டவில்லை. இதனால் டி20 உலகக்கோப்பை தொடருக்கு முன்னதாகவே புதிய பயிற்சியாளரை தேடும் பணியில் பிசிசிஇ. இறங்கியது. அதில் கவுதம் கம்பீர், ஆஷிஷ் நெஹ்ரா உள்ளிட்ட முன்னாள் வீரர்களுடன் பிசிசிஇ பேச்சு வார்த்தை நடத்தியதாக தகவல்கள் வெளியாகின. இருப்பினும் அதில் கவுதம் கம்பீருக்கே முன்னுரிமை அளிக்கப்படுவதாக கூறப்பட்டது. மேலும் பயிற்சியாளர் பதவிக்கு அவர் விண்ணப்பம் மட்டுமே ஏற்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. ஆனால் பயிற்சியாளர் பதவிக்கு நடத்தப்பட்ட நேர்காணலில் கம்பீருக்கு போட்டியாக யாரும் எதிர்பாராத விதமாக தமிழகத்தை சேர்ந்த முன்னாள் வீரரான டபிள்யூ.வி. ராமனும் கலந்து கொண்டார். இதனால் யார் அடுத்த தலைமை பயிற்சியாராக வருவார்? என்ற எதிர்பார்ப்பு அனைவரிடமும் காணப்பட்டது. இதனிடையே கம்பீர்தான் அடுத்த தலைமை பயிற்சியாளர் என்ற செய்திகளும் வெளிவந்தன. இந்நிலையில் அனைவரின் கருத்துகளின் படியே, இந்திய கிரிக்கெட் அணியின் புதிய தலைமை பயிற்சியாளராக கவுதம் கம்பீர் அதிகாரபூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளார்.



தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செறுக்கு

**விளக்கம்:**
தீயவை செய்தலாகிய செருக்கைத் தீவினை உடைய பாவிகள் அஞ்சார், தீவினை இல்லாத மேலோர் மட்டுமே அஞ்சுவர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 12002852826 6
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.